# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2015 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்) சட்டம்*

---

*(2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2015, யூன் மாதம் 05 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா *11.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

## *2015 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்) சட்டம்*

[*2015, யுன் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*ச. வ. ஓ. 39/2009*

***1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபைச் சட்டத்தை நீக்குவதற்கும் அதனோடு தொடர்பு பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்.*

***2.*** *ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 32 ஆம் இலக்க, தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.*

*பேணல்கள்.*

*3. (1) (இதனகத்துப்பின்னர் ''நீக்கப்பட்ட சட்டம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபைச் சட்டம் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும் -*

*(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று தேசியக் கல்வி நிறுவகத்துடனான தொழிலுக்காக விருப்புத் தெரிவித்த அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து வலுவுக்கு வருமாறு தேசியக் கல்வி நிறுவகத்தினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட அலுவலர்களாகவும் ஊழியர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;*

2-PL 009000 - 950 (2015/04)

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று நீக்கப்பட்ட சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட நிதியத்தின் வரவுக்கிருந்த எல்லாப் பணங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து வலுவுக்கு வருமாறு தேசியக் கல்வி நிறுவகத்தின் நிதியத்துக்குக் கைமாற்றப்பட்டனவாகவிருத்தல் வேண்டும் ;

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட அதிகார சபையின் அசைவுள்ள, அசைவற்ற எல்லா ஆதனங்களும் மற்றும் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக் களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து வலுவுக்கு வருமாறு தேசியக் கல்வி நிறுவகத்துக்குக் கைமாற்றப் பட்டனவாகவிருத்தல் வேண்டும் ;

(ஈ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட அதிகாரசபைக்கு வருமதியாகவிருந்த எல்லாத் தனிசுகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து வலுவுக்கு வருமாறு தேசியக் கல்வி நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள தனிசுகளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட அதிகார சபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப் பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா வழக்கு நடவடிக்கைகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து வலுவுக்கு வருமாறு தேசியக் கல்வி நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும் ;

(ஊ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட அதிகார சபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பதியப்பட்ட எல்லாத் தீர்ப்புக்களும் அல்லது கட்டளைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து வலுவுக்கு வருமாறு தேசியக் கல்வி நிறுவகத்துக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட தீர்ப்புக்களாக அல்லது கட்டளைகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தவும் படலாம் ; அத்துடன்

(எ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட அதிகார சபையினால் செய்துகொள்ளப்பட்டவையும் மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து வலுவுக்கு வருமாறு தேசியக் கல்வி நிறுவகத்தினால் செய்துகொள் ளப்பட்ட ஒப்பந்தங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

"அதிகாரசபை" என்பது, நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை என்று பொருளாகும் ;

"தேசியக் கல்வி நிறுவகம்" என்பது, 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசியக் கல்வி நிறுவகச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட தேசியக் கல்வி நிறுவகம் என்று பொருளாகும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்